முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

# (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advance Financial Accounting and Costing)

2021-03-20
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

***1.1*** *முதல்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. உமது விடைப் புத்தகத்தில் வினாக்களின் இலக்கங்களை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** நிதிக் கூற்றுக்களின் இரண்டு (02) பாகங்கள் (components):

(1) சொத்துக்களும் உரிமையாண்மையும்

(2) வருமானமும் செலவினங்களும்

(3) நிதி நிலைக் கூற்றும் முற்றடக்க வருமானக் கூற்றும்

(4) பரீட்சை மீதியும் காசேடும்

(02 புள்ளிகள்)

**1.2** பின்வரும் மீதிகள் 2019 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட செனரா (தனி.) கம்பனியின்** பதிவேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| மோட்டார் வாகனம் - கிரயத்தில் | 5,000 | |
| 2019 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் | | 1,500 |

2020 மார்ச் 31 இல், கம்பனி இந்த மோட்டார் வாகனத்தை ரூபா 3,200,000/- இற்கு விற்பனை செய்தது. மோட்டார் வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும்.

மோட்டார் வாகனத்தின் விற்பனை மீதான இலாபம் / நட்டமாக அமைவது :

(1) ரூபா 200,000/- (இலாபம்) (2) ரூபா 200,000/- (நட்டம்)

(3) ரூபா 300,000/- (இலாபம்) (4) ரூபா 300,000/- (நட்டம்) (02 புள்ளிகள்)

**1.3** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** கம்பனி தனது பங்குகளை பகிரங்கமாக வழங்க முடியும்.

**(b)** கம்பனி தனியொரு பங்குதாரருடன் கூட்டிணைக்கப்படலாம்.

**(c)** கம்பனி ஒன்றிலுள்ள பங்குதாரர்களின் அதிகபட்ச எண்ணிக்கை மீது எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை.

மேலே தரப்பட்டவற்றுள், சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(b)** மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள யாவும். (02 புள்ளிகள்)

**1.4** பின்வரும் தகவல்கள் **பொருள் A** தொடர்பில் பிரித்தெடுக்கப்பட்டவையாகும் :

| | |
|---|---|
| அதிகபட்ச பாவனை | மாதம் ஒன்றிற்கு 400 அலகுகள் |
| குறைந்தபட்சப் பாவனை | மாதம் ஒன்றிற்கு 150 அலகுகள் |
| கட்டளைக் காலம் (Lead time) | 2 - 4 மாதங்கள் |
| மறு கட்டளைக் கணியம் | 700 அலகுகள் |

**பொருள் A** இன் மறு கட்டளை மட்டமானது (Re-Order Level):

(1) 1,600 அலகுகள் (2) 1,000 அலகுகள் (3) 800 அலகுகள் (4) 1,500 அலகுகள்

(02 புள்ளிகள்)

**1.5** கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மூலப் பொருட்களின் கொள்வனவைப் பதிவு செய்வதற்கு ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை ஒன்றில் மேற்கொள்ளப்படும் சரியான இரட்டைப் பதிவாக அமைவது:

| | வரவு | செலவு |
|---|---|---|
| (1) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு |
| (2) | பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு |
| (3) | புத்துருவாகும் வேலை (WIP) கட்டுப்பாட்டுக் கணக்கு | பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு |
| (4) | பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு | புத்துருவாகும் வேலை (WIP)கட்டுப்பாட்டுக் கணக்கு |

(02 புள்ளிகள்)

***1.6*** முதல் ***1.10*** வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.

**1.6** 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் இரண்டு (02) ஏற்பாடுகளைக் (provisions) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.7** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின்படி பங்காளர் ஒருவரின் மூன்று (03) உரிமைகளைக் (rights) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** நிதிக் கணக்கீட்டிற்கும் கிரயக் கணக்கீட்டிற்குமிடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் (differences) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.9** பின்வரும் தகவல்கள் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட ABC (தனி.) கம்பனியின்** பதிவேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா '000** |
|---|---|
| விற்பனை மீதான VAT | 9,000 |
| கொள்வனவுகள் மீதான VAT | 5,500 |
| விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் திரும்பல் மீதான VAT | 550 |

2020 மார்ச் 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி ரூபா 4,500,000/- ஆக இருந்தது.

பெறுமதி சேர் வரி (VAT) கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குக. (03 புள்ளிகள்)

**1.10** **சுமுது** என்பவர் **வரையறுக்கப்பட்ட சில்கி வெயார் கம்பனியில்** பணி புரிகிறார். அவருக்கு அவரது நாளாந்த உற்பத்தி வெளியீட்டின் அடிப்படையில் வாராந்தம் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. 5 வேலை நாட்களைக் கொண்ட கடந்த வாரத்தில் அவருடைய நாளாந்த வெளியீடு கீழ்வருமாறு :

| **நாள்** | **துண்டுகள்** |
|---|---|
| 1 | 7 |
| 2 | 8 |
| 3 | 9 |
| 4 | 7 |
| 5 | 11 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) நாள் ஒன்றிக்கு 10 துண்டுகள் வரையான உற்பத்திக்கு, துண்டொன்றிற்கு ரூபா 150/- வீதம் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் **சுமுது**வுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட குறைந்தபட்சக் கொடுப்பனவு, நாள் ஒன்றுக்கு ரூபா 1,200/- ஆகும்.

(2) நாள் ஒன்றிற்கு 10 துண்டுகளுக்கும் அதிகமான உற்பத்தி மீது, 20% மேலதிக ஊக்குவிப்புக் (incentive) கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

மேற்படி வாரத்திற்கான **சுமுதுவின்** மொத்தக் கூலியைக் (total wages) கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**அனுஹாஸ், தேவ்மி** மற்றும் **லிஹினி** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 5 : 3 : 2 என்ற விகிதத்தில் பகிரும் **ADL பங்காளர்கள்** என்ற பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் ஆவர்.

(1) பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றை வழங்குகிறது :

- ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டொன்றிற்கு 10 % மூலதனம் மீதான வட்டி செலுத்தப்படுகிறது.
- **தேவ்மி**, மாதாந்தச் சம்பளமாக ரூபா 50,000/- இனைப் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.

(2) பின்வரும் மீதிகள் 2020 டிசெம்பர் 31 இல் பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவை ஆகும் :

| | **வரவு (ரூபா '000)** | **செலவு (ரூபா '000)** |
|---|---|---|
| 2020 சனவரி 01 இல் மூலதனக் கணக்கு: | | |
| **அனுஹாஸ்** | | 6,000 |
| **தேவ்மி** | | 4,500 |
| **லிஹினி** | | 3,000 |
| 2020 சனவரி 01 இல் நடைமுறைக் கணக்கு: | | |
| **அனுஹாஸ்** | | 1,200 |
| **தேவ்மி** | 900 | |
| **லிஹினி** | | 600 |
| எடுப்பனவுகள்: | | |
| **அனுஹாஸ்** | 1,400 | |
| **தேவ்மி** | 800 | |
| **லிஹினி** | 400 | |

(3) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 4,500,000/-.

(4) 2020 டிசெம்பர் 31 இல், தனது குடும்பப் பொறுப்புகள் காரணமாக பங்குடமையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு **லிஹினி** தீர்மானித்திருந்ததுடன் **அனுஹாஸ்** மற்றும் **தேவ்மி** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு பங்குடமையைத் தொடர்வதற்கு உடன்பட்டிருந்தனர்.

(5) 2020 டிசெம்பர் 31 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1,500,000/- ஆக மதிப்பிடப்பட்டதுடன், நன்மதிப்புக் கணக்கினைப் பேணாது, பங்காளர்களின் மூலதனக் கணக்கின் ஊடாகச் சீராக்கம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(6) 2020 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| | **2020 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை** | **கிரயம்** | **2020 டிசெம்பர் 31 இல் திரள் தேய்மானம்** |
|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 6,000 | 8,000 | 2,500 |
| மோட்டார் வாகனங்கள் | 3,000 | 4,000 | 1,400 |

நடைமுறையல்லாச் சொத்துக்களை பங்குடமைக் கணக்குகளில் மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் முன்கொண்டு செல்ல இணக்கம் காணப்பட்டது.

(7) **லிஹினிக்கு** அவரது ஓய்வின்போது செலுத்த வேண்டிய தொகையை கடன் கணக்கிற்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு (04 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதனக் கணக்கு (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

பின்வரும் தகவல்கள் **வெனுரா** என்பவருக்குச் சொந்தமான தளபாடக் கடையான **வெனுரா டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

(1) சொத்துக்களும் பரிப்புக்களும் பின்வருமாறு : *(ரூபா '000)*

| | **2019 ஏப்ரல் 01 இல்** | **2020 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| காணியும் கட்டடமும் - முன்கொணரற் பெறுமதியில் | 7,300 | 6,500 |
| மோட்டார் வாகனங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 5,000 | 6,400 |
| தொக்கு | 1,700 | 1,300 |
| வியாபார வருமதிகள் | 1,800 | 1,400 |
| வங்கி மீதி | 1,500 | ? |
| வியாபார சென்மதிகள் | 1,200 | 1,450 |
| அட்டுறு மின்சாரம் | 340 | 570 |

(2) **வெனுரா டிரேடர்ஸ்** முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை. 2019 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்து 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையிலான அவரது வங்கிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

*(ரூபா '000)*

| | |
|---|---|
| **வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசு :** | |
| காசு விற்பனை | 4,200 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 3,100 |
| **காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் :** | |
| காசு கொள்வனவுகள் | 1,320 |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 1,410 |
| மோட்டார் வாகனமொன்றின் கொள்வனவு | 1,800 |
| மின்சாரம் | 580 |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,200 |
| காகிதாதிகள் | 250 |

(3) **வெனுரா,** வசூலிக்கின்ற காசிலிருந்து தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்கென மாதாந்த எடுப்பனவாக எடுக்கின்ற ரூபா 40,000/- இனைத் தவிர, ஏனைய சகல காசுப் பெறுவனவுகளையும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்திருக்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வெனுரா டிரேடர்ஸ்** இன் 2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

**பியூச்சர் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகமானது** தனது செயற்பாடுகளை 2015 இல் ஆரம்பித்தது.

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கழகத்தின் பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) கழகமானது 2020 சனவரி 01 இல் 350 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அங்கத்தவர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கான அங்கத்துவக் கட்டணம் ரூபா 2,000/- ஆகும்.

(2) அங்கத்துவக் கட்டணம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

- (i) 2 அங்கத்தவர்கள், 2020 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களை 2019 ஆம் ஆண்டிலேயே செலுத்தியிருந்தனர்.
- (ii) 10 அங்கத்தவர்கள், செலுத்தப்படாதிருந்த 2019 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களை 2020 ஆம் ஆண்டில் செலுத்தியுள்ளனர்.
- (iii) 6 அங்கத்தவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களை 2020 ஆம் ஆண்டிலேயே செலுத்தியுள்ளனர்.
- (iv) 2020 டிசெம்பர் 31 இல், 2019 ஆம் ஆண்டிற்கும் அதே போன்று 2020 ஆம் ஆண்டிற்கும் செலுத்தப்படாது எவ்வித அங்கத்துவக் கட்டண நிலுவைகளும் காணப்படவில்லை.
- (v) 2020 ஆம் ஆண்டில் **பியூச்சர் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்தில்** புதிய அங்கத்தவர்கள் எவரும் சேரவில்லை.

(3) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கழகத்தின் கொள்ளல், கொடுத்தல் கணக்கின் ஒரு பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| **கொள்ளல்கள் (Receipts) :** | |
|---|---|
| நன்கொடைகள் | 720,000 |
| வைப்புகள் மீதான வட்டி | 432,500 |
| அங்கத்துவக் கட்டணங்கள் | ? |
| **கொடுத்தல்கள் (Payments) :** | |
| மின்சாரமும் மைதானப் பராமரிப்பும் | 397,000 |
| 2020.01.01 இல் விளையாட்டு உபகரணங்களின் கொள்வனவு | 115,000 |
| பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 45,000 |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 50,000 |
| கூலிகள் | 400,000 |
| விளம்பரப்படுத்தல் | 25,000 |

(4) நன்கொடைகள், ஆண்டிற்கான வருமானம் ஒன்றாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(5) விளையாட்டு உபகரணங்கள் 5 ஆண்டுகள் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2020 சனவரி 01 இல் இருந்த ஏனைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மானம் முற்றாகச் செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **பியூச்சர் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்காக** பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) அங்கத்துவக் கணக்கு (05 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்துகின்ற ஒரு கம்பனியான **பார்ட்டி போர்யு (Party 4You)** என்ற கம்பனியின் ஊடாக தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை ஒழுங்கமைக்க **ரியானா** என்பவர் விருப்பம் கொண்டுள்ளார். இது தொடர்பில் அக்கம்பனியினால் அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| உணவுகளுக்கான கிரயம் | ஆகக் குறைந்தது 25 நபர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூபா 300/- |
| வாத்தியம், இசைக் கருவிகள் மற்றும் சோடனைக்கான கிரயம் | நிகழ்வு ஒன்றுக்கு ரூபா 8,500/- |
| நிழற்படம் எடுத்தல் | நிகழ்வு ஒன்றுக்கு ரூபா 10,000/- |
| மண்டபத்திற்கான கட்டணம் | நிகழ்வு ஒன்றுக்கு ரூபா 15,000/- |
| சேவை வழங்குவதற்காக ஊழியர்களின் ஒதுக்கீடு | ஊழியர் ஒருவருக்கு ரூபா 2,500/- |
| ஏனைய மேந்தலைகளின் ஒதுக்கீடு | நிகழ்வு ஒன்றுக்கு ரூபா 3,950/- |

**ரியானா** இந்த நிகழ்வுக்காக 32 நபர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்ப்பதுடன், அவர்களுக்கு சேவை வழங்குவதற்காக 2 ஊழியர்களைப் பெற எதிர்பார்க்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**ரியானா** தனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காகச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது?
(05 புள்ளிகள்)

(b) வெதுப்பக உணவுப் பொருட்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனியான **வரையறுக்கப்பட்ட பேக்கர்ஸ் குக்கீஸ் (தனி.) கம்பனி** ஒருங்கிணைக்கப்படாத (Non-Integrated) கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துகிறது. 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிரயக் கணக்குகளில் காட்டப்பட்ட இலாபம் ரூபா 120,300/- ஆக இருக்கின்ற அதே வேளை நிதிக் கணக்குகளின்படி இலாபமாக ரூபா 147,900/- பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) தொக்கு மதிப்பீடு,

| | கிரயக் கணக்குகளின்படி (ரூபா) | நிதிக் கணக்குகளின்படி (ரூபா) |
|---|---|---|
| ஆரம்பத் தொக்கு | 139,450 | 125,500 |
| இறுதித் தொக்கு | 163,400 | 175,200 |

(2) நிலையான வைப்பு மீது பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 35,850/- ஆனது நிதிக் கணக்குகளில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) ஆலோசனைக் கட்டணம் ரூபா 39,000/- ஆனது நிதிக் கணக்குகளில் தாக்கல் (charged) செய்யப்பட்டிருந்த அதே வேளை கிரயக் கணக்குகளில் தாக்கல் செய்யப்படவில்லை.

(4) கிரயக் கணக்குகளின்படியான மேந்தலைக் கிரயம் ரூபா 545,000/- ஆக இருந்ததுடன் அது நிதிக் கணக்குகளின்படி ரூபா 540,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நிதிக் கணக்குகள் மற்றும் கிரயக் கணக்குகளுக்கிடையிலான இலாப இணக்கக் கூற்றினைத் **தயாரிக்குக.**
(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

தொற்றுநீக்கித் திரவப் போத்தல்களை (sanitizer bottles) தயாரிக்கும் ஒரு நடுத்தர அளவு கம்பனியான **வரையறுக்கப்பட்ட சேவ்ப் ஹான்ட்ஸ் (தனி.) கம்பனியானது** இரண்டு (2) உற்பத்திப் பிரிவுகளையும் (தயாரிப்பு மற்றும் பொதியிடல்), ஒரு (1) சேவைப் பிரிவையும் (தொழில்நுட்பம்) கொண்டுள்ளது.

(1) கம்பனியானது கீழே தரப்பட்டவாறு வருடாந்த உற்பத்தி மேந்தலைக் கிரயமாக ரூபா 7,500,000/- இனை மதிப்பிட்டிருந்தது :

| **கிரய உருப்படி** | **கிரயம் (ரூபா)** |
|---|---:|
| இயந்திரத் தேய்மானம் | 2,500,000 |
| கட்டட வாடகை | 2,400,000 |
| தரக் கட்டுப்பாட்டுச் செலவுகள் | 800,000 |
| மின்சாரம் | 1,800,000 |
| **மொத்த உற்பத்தி மேந்தலைக் கிரயம்** | **7,500,000** |

(2) மேந்தலைப் பகிர்வு அடிப்படைகள் கீழே தரப்பட்டுள்ளன :

| **அடிப்படை** | **உற்பத்திப் பிரிவு** | | **சேவைப் பிரிவு** | **மொத்தம்** |
|---|---:|---:|---:|---:|
| | **தயாரிப்பு** | **பொதியிடல்** | **தொழில்நுட்பம்** | |
| இயந்திர மணித்தியாலம் | 300,000 | 150,000 | 50,000 | 500,000 |
| தரைப் பரப்பு (சதுர அடி) | 1,600 | 500 | 400 | 2,500 |
| மின்சாரப் பாவனை (கிலோவாற்று) | 1,000 | 600 | 200 | 1,800 |
| தரப் பரிசீலனைகளின் எண்ணிக்கை | 12 | 8 | - | 20 |
| நேர் கூலி மணித்தியாலம் | 100,000 | 200,000 | - | 300,000 |
| கிரயப் பகிர்வு – தொழில்நுட்பம் | 60% | 40% | - | 100% |
| போத்தல் ஒன்றிற்கான நேர் கூலி மணித்தியாலம் | 1 | 2 | - | - |

(3) போத்தல் ஒன்றிற்காக மதிப்பிடப்பட்ட நேர் கிரயங்கள் கீழ்வருமாறு :

| **போத்தல் ஒன்றிற்கு** | **ரூபா** |
|---|---:|
| நேர் பொருள் | 20 |
| நேர் கூலி | 15 |
| **முதன்மைக் கிரயம்** | **35** |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேந்தலைகள் எவ்வாறு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டு பகிரப்படுகிறது என்பதைக் காட்டும் கூற்றொன்றினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் நேர் கூலி மணித்தியாலம் ஒன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(c) ஒரு தொற்றுநீக்கித் திரவப் போத்தலின் மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட உதாரா (தனி.) கம்பனியின்** 2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (2,000,000 சாதாரண பங்குகள்) | | 108,000 |
| கைக்கொள் இலாபம் - 2019 ஏப்ரல் 01 இல் | | 45,600 |
| பொது ஒதுக்கம் - 2019 ஏப்ரல் 01 இல் | | 20,000 |
| 10% தனிச்சங்கள் | | 20,000 |
| காணி மற்றும் கட்டடம் - கிரயத்தில் (காணி - ரூபா 40 மில்லியன்) | 100,000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 75,000 | |
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 120,000 | |
| திரள் தேய்மானம் - 2019 ஏப்ரல் 01 இல் : | | |
| கட்டடம் | | 32,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 30,000 |
| பொறி மற்றும் உபகரணம் | | 48,000 |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு – 2019 ஏப்ரல் 01 இல் | | 5,080 |
| தொக்கு – 2020 மார்ச் 31 இல் | 54,900 | |
| வியாபார வருமதிகள் | 84,300 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 15,230 | |
| வியாபார சென்மதிகள் | | 8,000 |
| விற்பனைகள் | | 919,500 |
| விற்பனைக் கிரயம் | 648,300 | |
| பிரயாணம் மற்றும் போக்குவரத்து | 15,400 | |
| விளம்பரப்படுத்தல் | 10,600 | |
| விற்பனைப் பணிசை (தரகு) | 7,600 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 56,000 | |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 2,400 | |
| மின்சாரம் மற்றும் நீர் | 8,600 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 3,800 | |
| வங்கிக் கட்டணங்கள் | 250 | |
| பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 2,400 | |
| காப்புறுதிச் செலவுகள் | 3,600 | |
| தனிச்ச வட்டி | 1,000 | |
| சாதாரண பங்குகளுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 27,500 | |
| வருமான வரி ஏற்பாடு – 2019 ஏப்ரல் 01 இல் | | 16,000 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 15,300 | |
| | **1,252,180** | **1,252,180** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இலான இறுதித் தொக்கு கணக்கிடப்பட்டு, அதன் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது. ரூபா 4,900,000/-இற்கு வாங்கப்பட்டு, இறுதித் தொக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த தொக்கின் ஒரு பகுதி வழக்கிழந்து (obsolete) போயிருந்ததுடன் அதனை 2020 ஏப்ரலில் ரூபா 4,200,000/- இற்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இது கணக்கேடுகளில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(2) வணிகத்திற்கு ரூபா 2,300,000/- செலுத்த வேண்டிய வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலை அடைந்தவராக 2020 ஏப்ரல் 20 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டார். வியாபார வருமதிகளின் இறுதி மீளாய்வினைத் தொடர்ந்து, 2020 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியின் மீது 10 % இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடொன்றைப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(3) பின்வரும் அட்டுறு மற்றும் முன்செலுத்திய (prepaid) செலவினங்கள் 2020 மார்ச் 31 இல் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

| | ரூபா |
|---|---|
| அட்டுறு மின்சாரம் | 100,000 |
| முன்செலுத்திய பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் | 200,000 |

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (PPE) கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| கட்டடம் | 20 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 10 ஆண்டுகள் |
| பொறி மற்றும் உபகரணம் | 15 ஆண்டுகள் |

(5) வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான இறுதி வருமான வரிப் பரிப்பு ரூபா 15,300,000/- ஆனது நடப்பு ஆண்டில் செலுத்தப்பட்டது. வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 11,500,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

(6) 2019 ஏப்ரல் 01 இல், கம்பனியானது ஒவ்வொன்றும் ரூபா 1000/- என்ற அதன் சமப் பெறுமதியில் (par value) 20,000 எண்ணிக்கையிலான 10% தனிச்சங்களை வழங்கியது. வட்டியானது அரையாண்டிற்கு ஒரு முறை செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வட்டியானது தனிச்ச வட்டிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(7) 2020 மார்ச் 31 இல், பணிப்பாளர் சபையானது ரூபா 10,000,000/- இனை கைக்கொள் இலாபத்திலிருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றத் தீர்மானித்திருந்தது.

(8) பணிப்பாளர் சபையானது 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக 2020 யூலை 31 இல் அங்கீகாரம் வழங்கியது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

முகாமையின் பயன்பாட்டிற்காக **வரையறுக்கப்பட்ட உதாரா (தனி.) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (13 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# <u>செயல் வினைச்சொல் செவ்வை நிரல்</u>

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |